வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்3685/அ2/2020, நாள் 16.02.2021

---

பொருள்: பள்ளிக்கல்வி - வேலூர் மாவட்டம் - அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் .1மற்றும் .2 வகுப்பு (இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம்) மாணவர்கள் - அமிர்தா விஷ்வ வித்யாபீடம் மற்றும் இந்து தமிழ் திசை நாளிதழ் உடன் FIIT JEE இணைந்து நடத்தும் இலவச ஆன்லைன் பயிற்சி - அனுமதி வழங்குதல் - சார்ந்து.

பார்வை:
1) அரசாணை நிலை எண்.85, பள்ளிக்கல்வித் துறை நாள் 29.07.2020
2) இந்து தமிழ் திசை நாளிதழ் திரு டி.சுரேஷ், என்பவரின் கடிதம், நாள் 09.02.2021

---

பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி, 2021-ஆம் ஆண்டில் JEE (Joint Entrance Examination) மெயின் தேர்வை எதிர்கொள்ளும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு (இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம் பாடப்பிரிவு) மாணவர்களுக்கு JEE தேர்வு குறித்த சந்தேகங்களை களையவும், தேர்வு பயத்தை போக்கவும் அமிர்தா விஷ்வ வித்யாபீடம் (Deemed to be university) மற்றும் இந்து தம்ழ் திசை நாளிதழ் உடன் FIIT JEE பயிற்சி மையம் இணைந்து இலவச ஆன்லைன் பயிற்சி வழங்கவும், இப்பயிற்சிக்கான முதல் நிலை சோதனை தேரவு ஆன்லைன் வழியில் நடத்தி அதில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் 7500 மாணவர்களுக்கு 90 மணி நேரங்களுக்கு இலவச ஆன்லைன் பயிற்சி நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இப்பயிற்சியில் கலந்துகொள்ள அனுமதியளிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

மேற்படி இலவச ஆன்லைன் பயிற்சியில் வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்துஅரசு மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கலந்தகொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதியளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1) பள்ளியின் கற்றல்-கற்பித்தல் / தேர்வு செயல்பாடுகள் பாதிக்கப்படக்கூடாது.
2) எவ்வித புகாருக்கும் இடமின்றி ஆன்லைன் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுதல் வேண்டும்.
3) மாணவர்களிடம் இது சார்பான எவ்விதமான கட்டணமும் வசூலிக்கக்கூடாது.
4) இந்த அனுமதியானது 2020-21ஆம் கல்வியாண்டிற்கு மட்டுமே வழங்கப்படுகிறது.
5) பார்வை 1ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள இணையதள வகுப்புகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றுதல் வேண்டும்.
6) மாணவர்களின் தனிப்பட்ட விவரங்கள் ஏதும் கோரக்கூடாது.

இணைப்பு: போட்டி குறித்த விவரங்கள்

16.2.21

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

17.2.21

பெறுநர்
அனைத்து அரசு மற்றும் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி
தலைமையாசிரியர்கள்
நகல்
மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர்
நகல்
திரு டி.சுரேஷ், இந்து தமிழ் திசை நாளிதழ்

Scanned with CamScanner